www.tntextbooks.in

தமிழ்நாடு அரசு

# நான்காம் வகுப்பு

## பருவம் – 1

## தொகுதி – 2

# கணக்கு
# அறிவியல்
# சமூக அறிவியல்

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

## பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

www.tntextbooks.in

தமிழ்நாடு அரசு

*முதல் பதிப்பு - 2019*

(புதிய பாடத்திட்டத்தின் கீழ்
வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும்
தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்
© SCERT 2019

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in



TN_GOVT_4 Std_Maths_Front Page.indd 2 09-05-2019 16:16:34

www.tntextbooks.in

4

# சமூக அறிவியல்

## முதல் பருவம்



www.tntextbooks.in

# பொருளடக்கம்


| அலகு | தலைப்பு | பக்கம் எண் |
| --- | --- | --- |
| 1 | ஆற்றங்கரை அரசுகள் | 125 |
| 2 | ஐவகை நில அமைப்பு | 135 |
| 3 | நகராட்சி மற்றும் மாநகராட்சி | 147 |


5EUVZ8
மின்நூல்

HBGQP4
மதிப்பீடு

B325_4_SOCIAL_TM
இணைய வளங்கள்





# அலகு 1 ஆற்றங்கரை அரசுகள்



U83KDZ

## கற்றல் நோக்கங்கள்

- சங்ககாலத் தமிழ் அரசுகளைப் பற்றி அறிதல்
- சேரர்கள், சோழர்கள் மற்றும் பாண்டியர்கள் பற்றி அறிதல்
- சங்ககால நிர்வாக, பொருளாதார மற்றும் சமூக நிலைகளைப் பற்றிப் புரிந்து கொள்ளுதல்
- குறுநில மன்னர்களைப் பற்றி அறிதல்

"வளையாத செங்கோலுக்குச் சேர மன்னன்!
தஞ்சையின் அரிசி வளத்திற்குச் சோழ மன்னன்!
முத்தமிழ் முத்துக்குப் பாண்டிய மன்னன்!
குகைக் கோயில் ரதங்களுக்குப் பல்லவ மன்னன்!
நீங்களோ! தமிழ் மண்ணின் தங்கங்கள் மற்றும் சிங்கங்கள்!"

## முன்னுரை

பண்டைய காலத்தில் மக்கள் ஆற்றங்கரை ஓரங்களில் குடியேறித் தங்களது வாழ்க்கையைத் தொடங்கினர்.

அவர்கள், வேளாண்மைப் பயிர்களை உற்பத்தி செய்தனர். மேய்ச்சல் நிலங்களில் கால்நடைகளை மேய்த்தனர். இதன் விளைவாக ஆற்றங்கரை ஓரங்களில் சேர, சோழ மற்றும் பாண்டியர்கள் போன்ற இதர அரசுகள் தோன்றின.

| அரசர்கள் | | ஆற்றங்கரைகள் |
|---|---|---|
| சேரர்கள் | – | பொய்கை |
| சோழர்கள் | – | காவிரி |
| பாண்டியர்கள் | – | வைகை |
| பல்லவர்கள் | – | பாலாறு |

YGJGMA

## சேரர்கள்

மூவேந்தர்களில் சேரர்களே முதன்மையானவர்கள். இவர்கள் பொய்கை ஆற்றங்கரையை மையமாகக் கொண்டு ஆட்சி செய்தனர். இவர்களின் தலைநகரம் வஞ்சியாகும்.

சேரநாடு தற்போதைய ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி போன்ற மேற்கு மாவட்டங்களை உள்ளடக்கியதாக இருந்தது. கேரளாவும் சேர நாட்டின் ஒரு பகுதியாக இருந்தது.

பெரும்பாலான சேர நாட்டுப் பகுதிகள், உயரமான மலைகளால் சூழப்பட்டிருந்தன. சேரர்களில் மிகவும் புகழ் பெற்ற அரசர்கள் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும் அவருடைய மகன் சேரன் செங்குட்டுவனும் ஆவர்.

நெடுங்சேரலாதன் இமயம்வரை படையெடுத்துச் சென்று, வில் அம்பு பொறித்த கொடியினை இமயத்தில் பறக்கவிட்டார். அதனால் அவர் 'இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்' என்ற பெயர் பெற்றார்.



இமய மலை



சேரன் செங்குட்டுவன்

தன் தந்தையைப் போலவே சேரன் செங்குட்டுவனும் இமயம்வரை படையெடுத்துச் சென்று கனக விஜயரைத் தோற்கடித்தார். இவ்வெற்றியினைப் போற்றும் விதத்தில் இமயத்திலிருந்து கல் கொண்டு வந்து, கண்ணகிக்குச் சிலை வடித்து கோயில் கட்டினார். இக்கோயிலைக் கட்டுவதற்குத் தேவையான கற்கள் சிறைப் பிடிக்கப்பட்ட வீரர்களின் தலைகளில் வைத்துக் கொண்டு வரப்பட்டன.

இச்சிறப்பினை, செங்குட்டுவனின் சகோதரன் இளங்கோவடிகள் எழுதிய காப்பியமான சிலப்பதிகாரம் வாயிலாக தெரிந்துக் கொள்ளலாம். சங்ககால சேர அரசர்களைப் பற்றி அறிந்து கொள்ள பதிற்றுப்பத்து பெரும் உதவியாக விளங்குகிறது.

**சேரர்கள் :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. ஆறு | – | பொய்கை | 2. தலைநகரம் | – | வஞ்சி |
| 3. துறைமுகம் | – | தொண்டி, முசிறி | 4. கொடி | – | வில் அம்பு |

**விடையளிக்க முயற்சி செய்**

- முற்கால சேரர்களில் புகழ் பெற்ற அரசர்கள் யாவர்?
- இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட காப்பியத்தின் பெயர் என்ன?

## சோழர்கள்

உறையூரைத் தலைநகரமாகக் கொண்டு காவிரி ஆற்றங்கரையைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சோழர்கள் ஆட்சி செய்தனர். பட்டினப்பாலையின் ஆசிரியரான கடியலூர் உருத்திரங்கண்ணனார், "சோழநாடு சோறுடைத்து" என்று குறிப்பிட்டதன் மூலம் சோழநாடு அரிசிக்குப் புகழ் பெற்றதாகத் திகழ்ந்தது என்பதனை அறிய முடிகிறது.

திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, நாகப்பட்டினம், திருவாரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் கடலூர் ஆகிய இன்றைய மாவட்டங்களை உள்ளடக்கியதாகச் சோழப் பேரரசு விளங்கியது.

காவிரியின் ஆற்றங்கரையில் இருந்ததால், சோழப் பேரரசு ஓர் வளமிக்கப் பகுதியாக இருந்தது. அரசர்கள் தங்களது மேலான நீதி அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆட்சி செய்தனர். சோழர்களின் புகழ்மிக்க அரசராகத் திகழ்ந்தவர் 'கரிகால் பெருவளத்தான்' என அழைக்கப்பட்ட கரிகாலச் சோழன் ஆவார்.



கரிகாலச் சோழன்

மிக இளம் வயதிலேயே அரியணை ஏறிய கரிகாலன் மிகத் திறமையாக ஆட்சி செய்தார். அவர் இளம் வயதினராக இருக்கும் பொழுது, அவரது எதிரிகளால் சிறை வைக்கப்பட்டார். மேலும் அவர் சிறை வைக்கப்பட்டிருந்த அறை, எதிரிகளால் தீ வைத்து எரிக்கப்பட்டது. இத்தீ விபத்தினால் தமது காலில், ஏற்பட்ட தீப்புண்ணின் விளைவாகப் பின்னாளில் 'கரிகாலன்' என்று அவர் அழைக்கப்பட்டார்.

மேலும் தமது இளம் வயதிலேயே ஒரு முதியவர் போல் மாறுவேடமிட்டு, ஒரு வழக்கினைத் தீர்த்து வைத்த பெருமையும் கரிகாலனையே சேரும்.

வெண்ணி மற்றும் வாகைப்பறந்தலை என்னும் போர்க்களத்தில், சேரர் மற்றும் பாண்டியர்களைக் கரிகாலன் தோற்கடித்தார். மேலும் இலங்கையின் மீது படையெடுத்துச் சென்று, அங்கு சிறைப் பிடிக்கப்பட்ட போர்க்கைதிகளைக் கொண்டு காவிரியின் மீது கல்லணையைக் கட்டினார். 2000 ஆண்டுகள் ஆகியும், கல்லணை இன்றும் கரிகாலனின் புகழ்பாடும் வண்ணம் மிகக் கம்பீரமாகக் காவிரி ஆற்றங்கரையில் காட்சியளிக்கின்றது.



**கல்லணை**

## சோழர்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1. ஆறு | – காவிரி | 2. தலைநகரம் | – உறையூர் |
| 3. துறைமுகம் | – காவிரிப் பூம்பட்டினம் | 4. கொடி | – புலிக்கொடி |

### தெரிந்து கொள்ளலாமா?

❖ கல்லணை கி.மு.(பொ.ஆ.மு) 2–ஆம் நூற்றாண்டில் கரிகாலச் சோழனால் கட்டப்பட்டது. உலகில் இன்றளவும் அழியாமல் பயன்பாட்டில் இருக்கக்கூடிய மிகப் பழைமையான அணை இதுவேயாகும். இவ்வணை கற்கள் மற்றும் சுண்ணாம்புக் கலவைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது.

### விடையளிக்க முயற்சி செய்!

❖ பண்டைய சோழ அரசர்களுள் புகழ் பெற்ற அரசர் யார்?

❖ சோழர்களின் தலைநகரம் மற்றும் துறைமுகங்களின் பெயர்களைக் கூறுக.

## பாண்டியர்கள்


மதுரை மீனாட்சி அம்மன் கோயில்

பாண்டியர்கள், வைகை ஆற்றங்கரையில் மதுரையைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். பண்டைய பாண்டியப் பேரரசானது மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களை உள்ளடக்கியதாக இருந்தது.

சங்ககாலத்தில், மிகவும் புகழ்பெற்ற நகரமாக மதுரைத் திகழ்ந்தது. பாண்டிய நாடு முத்துக்குப் புகழ் பெற்றதாக இருந்தது. மூன்று தமிழ்ச் சங்கங்கள் பாண்டியப் பேரரசில் கூட்டப்பட்டன. 3–ஆவது தமிழ்ச் சங்கம் தற்போதைய மதுரையில் கூட்டப்பட்டது. முத்தமிழ்ச் சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த பெருமை பாண்டியர்களையே சாரும். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் மற்றும் சிலப்பதிகார பாண்டிய நெடுஞ்செழியன் ஆகியோர் பாண்டியர்களில் புகழ்மிக்க அரசர்களாவர்.

பாண்டிய நெடுஞ்செழியன் தமது இளமைக் காலத்தில் சேரர்கள், சோழர்கள் மற்றும் குறுநில மன்னர்களின் கூட்டுப்படையைத் தலையாலங்கானம் என்னுமிடத்தில் தோற்கடித்தார். இவ்வெற்றியின் விளைவாகத் 'தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன்' என்று பெயர் பெற்றார்.

### சிலப்பதிகாரம்:



பாண்டிய நெடுஞ்செழியன் தமது ஆட்சி காலத்தின்போது திருட்டுக் குற்றம் சாட்டப்பட்ட கோவலனுக்கு மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். கோவலனின் மனைவி கண்ணகி தன்னுடைய கணவன் குற்றமற்றவர் என்று நிரூபித்தார்.

கோவலன், குற்றமற்றவர் என்பதை அறிந்த பாண்டிய நெடுஞ்செழியன் தாம் தவறாகத் தீர்ப்பு வழங்கியதை எண்ணி வருத்தப்பட்டார். "யானோ அரசன், யானே கள்வன்"... "கெடுகவென் ஆயுள்" என்று கூறிக் கீழே விழுந்து தமது உயிரைவிட்டார். அவருடன் சேர்ந்து அவரது மனைவி கோப்பெருந்தேவியும் தனது உயிரைத் தியாகம் செய்தார். பாண்டியர்களின் நிர்வாக முறையைப் பற்றி 'மாங்குடி மருதனார்' தமது 'மதுரைக் காஞ்சி' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

### பாண்டியர்கள்:

1. ஆறு – வைகை
2. தலைநகரம் – மதுரை
3. துறைமுகம் – கொற்கை
4. கொடி – மீன்

**விடையளிக்க முயற்சி செய்!**

- ❖ சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாண்டிய மன்னன் யார்?
- ❖ மதுரைக் காஞ்சி என்னும் நூலை இயற்றியவர் யார்?
- ❖ பாண்டியர்களின் கொடியில் குறிக்கப்பட்டுள்ள சின்னம் எது?

**தெரிந்து கொள்ளலாமா?**

பண்டைய மதுரை மாநகரில் 'நாளங்காடி' என்ற பகல்நேரக் கடைகளும், 'அல்லங்காடி' என்ற இரவு நேரக் கடைகளும் இருந்தன.

## பண்டைய தமிழ் பேரரசுகள் (மூவேந்தர்கள்)

செயல்பாடு 1

**கோடிட்ட இடத்தை நிரப்புக**

| அரசுகள் | தலைநகரம் | துறைமுகம் | சின்னம் | புகழ்பெற்ற அரசர்கள் |
|---|---|---|---|---|
| சேரர்கள் | வஞ்சி | _______ | வில் அம்பு | _______ |
| சோழர்கள் | _______ | காவிரிப் பூம்பட்டினம் | _______ | கரிகாலச் சோழன் |
| பாண்டியர்கள் | மதுரை | _______ | மீன் | _______ |

செயல்பாடு 2

**மூவேந்தர்கள் ஆட்சிக்குட்பட்ட தற்போதைய தமிழக மாவட்டங்களைப் பட்டியலிடுக.**

சேரர்கள் : ______________________________

சோழர்கள் : ______________________________

பாண்டியர்கள் : ______________________________

## பல்லவர்கள்

பண்டைய பல்லவ மரபினர் காஞ்சிபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டு, பாலாற்றுப் பகுதியில் ஆட்சி செய்தனர். இப்பகுதி தொண்டை மண்டலம் என்று அழைக்கப்பட்டது. இப்பகுதி தமிழகத்தின் வடகிழக்கில் அமைந்துள்ளது.

**மகாபலிபுரம்**



வராகா குடைவரைக் கோவில்



புலிக் குகை

முற்காலப் பல்லவ மரபை நிறுவியவர் சிவஸ்கந்தவர்ம பல்லவன் ஆவார். இவர் தொண்டை மண்டலத்தை ஒருங்கிணைத்து ஆட்சி செய்தார். அக்காலத்துச் சிறந்த பல்லவ மன்னர்கள் சிவஸ்கந்தவர்மன் மற்றும் விஷ்ணுகோபன் ஆவர்.

பிற்காலப் பல்லவ மரபு சிம்மவிஷ்ணுவின் ஆட்சியிலிருந்து துவங்குகிறது. மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் ஆகியோர் பிற்காலப் பல்லவர்களில் சிறந்த அரசர்களாவர். குடைவரைக் கோயில்களையும் ஒற்றைக் கல் ரதங்களையும் அமைத்தது பல்லவர்களின் மிகப்பெரும் சாதனைகள் ஆகும்.

**பல்லவர்கள்:**

1. ஆறு – பாலாறு
2. தலைநகரம் – காஞ்சிபுரம்
3. துறைமுகம் – மகாபலிபுரம்
4. கொடி – நந்தி

**விடையளிக்க முயற்சி செய் !**

- பல்லவர்களின் தலைநகரம் எது?
- தமிழ்நாட்டில் 'தொண்டை மண்டலம்' எந்த திசையில் அமைந்துள்ளது?

## குறுநில மன்னர்கள்

மூவேந்தர்களை தவிர்த்து, மிகச்சிறிய நிலப்பரப்பினை ஆட்சி செய்தவர்கள் குறுநில மன்னர்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்களில் பேகன், பாரி, நெடுமுடிக் காரி, ஆய், அதியமான், நல்லி, வல்வில் ஓரி ஆகியோர் மிகவும் முக்கியமானவர்கள் ஆவர்.



பேகன்



பாரி



நெடுமுடிக் காரி



அதியமான்



வல்வில் ஓரி

இம்மன்னர்கள் தங்களுடைய கொடைத் திறனால் மிகவும் புகழ்பெற்றவர்களாக அறியப்பட்டனர். பொதுவாக இவர்கள் 'கடையேழு வள்ளல்கள்' என்று அழைக்கப்படுகின்றனர்.

**விடையளிக்க முயற்சி செய்!**

❖ ஔவையாருக்கு நெல்லிக்கனியை வழங்கியவர் யார்?

❖ மயிலுக்குத் தமது போர்வையை தந்தவர் யார்?

## சங்ககால நிர்வாக நிலை

கோ, கோன், வேந்தன், கொற்றவன், இறை என்னும் சிறப்புப் பெயர்களால் அரசர் அழைக்கப்பட்டார். ஒவ்வொரு அரசும் தனக்கென கொடி, சின்னம், செங்கோல், வாள், பறை மற்றும் வெண்கொற்றக்குடை ஆகியவற்றைக் கொண்டிருந்தது.

அரசர்கள் திறமையான போர்வீரர்களாக இருந்தது மட்டுமல்லாமல், சிறந்த படைப்பாளிகளாகவும் இருந்தனர். அரசுரிமை, மரபுரிமையைப் பின்பற்றியே இருந்தது. அரசனின் மூத்தமகன் பட்டத்திற்கு வருவது இயல்பான ஒன்றாக இருந்தது. அரசர்கள் தங்களது மக்கள் மீது மிகவும் பொறுப்புடையவர்களாக இருந்தனர்.

## விருந்தோம்பல்



சங்க காலத்தில் விருந்தோம்பல் என்னும் பண்பு மிக முக்கிய இடத்தை வகித்தது. விருந்தினரை வீட்டிற்கு வெளியில் காத்திருக்க விட்டு, குடும்ப உறுப்பினர்கள் உண்ணும் உணவு அமிர்தமாக இருப்பினும் அது ஒரு பாவச் செயலாகக் கருதப்பட்டது.

விருந்தினரின் வருகையை அறிவிக்கும் காகத்தைப் புகழ்ந்து பாடிய புலவர், காக்கைப் பாடினியார் என்ற பெயரைப் பெற்றார். விருந்தோம்பல் என்பது பண்டைய தமிழர்களின் முக்கிய கடமையாக இருந்தது என்று புறநானூறு கூறுகிறது.

## பொருளாதார நிலை



பொருளாதார வளர்ச்சியினால் சங்க காலத்தில் பல்வேறு கலை மற்றும் கைத்தொழில்கள் வளமுற்றிருந்தன. இதனால் மக்கள் இக்காலத்தில் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

www.tntextbooks.in
















நெல் மற்றும் கரும்பு ஆகியவை முக்கிய பயிர்களாகும். அதே சமயத்தில் வரகு, தினை, சாமை ஆகியவையும் பயிரிடப்பட்டன.

**"வரப்புயர நீர் உயரும்,**
**நீர் உயர நெல் உயரும்,**
**நெல் உயர குடி உயரும்,**
**குடி உயர கோல் உயரும்,**
**கோல் உயர கோன் உயர்வான்"**

**- ஔவையார்**

மேற்கண்ட பாடல் வரிகள் மூலம், அரசர்களின் செல்வச் செழிப்பு என்பது வேளாண்மை வளர்ச்சி மூலமே ஏற்பட்டது என்பதை ஔவையார் குறிப்பிடுகிறார்.

**தெரிந்து கொள்ளலாமா?**

ஔவையார் 'வரப்புயர' என்று வாழ்த்துவதன் மூலம் சங்ககாலத்தில் வேளாண்மைக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தை நாம் அறிந்து கொள்ளலாம்.

## பெண்களின் நிலை

பெண்கள், சமுதாயத்தில் உயர் மதிப்பினைப் பெற்றிருந்தனர். "ஒருவனுக்கு ஒருத்தி" என்ற 'ஒருதார மணம்' பரவலாகக் காணப்பட்டது. பெண்கள் ஆண்களுக்கு இணையான வீரத்தினைப் பெற்றிருந்தனர். "முதல் நாள் போர்க்களத்தில் ஒரு பெண் தந்தையையும் இரண்டாவது நாளில் தன் கணவனையும் இழந்துவிட்டாள். இத்தகைய மிகப்பெரிய இழப்புகள் இருந்த போதிலும், அவளுடைய மகனைப் பெரும் ஆர்வத்தோடு போர்க்களத்திற்கு அனுப்புகிறாள்" என்ற செய்தியைப் புறநானூறு வாயிலாக தெரிந்து கொள்ளலாம்.

மேலும் சங்க காலத்தில் பெண்கள், புலியைத் தங்களுடைய முறத்தால் அடித்து விரட்டிய செய்தியையும் புறநானூறு வாயிலாக தெரிந்து கொள்ளலாம்.

**விடையளிக்க முயற்சி செய்!**

தற்பொழுது தமிழர்களால் கொண்டாடப்படும் விழாக்களைப் பட்டியலிடுக.

## திருவிழாக்கள்

சங்க காலத் தமிழர்கள் பல்வேறு திருவிழாக்களை கொண்டாடினர். கார்த்திகை, திருவாதிரை மற்றும் அறுவடைத் திருவிழா போன்றவை முக்கியமானவையாகும்.

மிகவும் புகழ்பெற்ற 'இந்திரவிழா' புகார் நகரத்தில் கொண்டாடப்பட்ட செய்தியைப் 'பட்டினப்பாலை' என்ற நூலில் 'உருத்திரங்கண்ணனார்' கூறியுள்ளார்.



அறுவடைத் திருவிழா

# மதிப்பீடு

### அ. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. சேர, சோழ, பாண்டியர்கள்_____________என அழைக்கப்பட்டனர்.
   அ) நாயன்மார்கள் ஆ) மூவேந்தர்கள் இ) குறுநில மன்னர்கள்
2. சேரர்களில் புகழ் பெற்ற அரசராகக் கருதப்படுபவர்_____________.
   அ) கரிகாலன் ஆ) வல்வில் ஓரி இ) சேரன் செங்குட்டுவன்
3. சோழர்களின் துறைமுகம்_____________.
   அ) காவிரிப்பூம்பட்டினம் ஆ) சென்னை இ) தொண்டி
4. பாண்டியர்களின் கொடியில் இடம்பெற்றுள்ள சின்னம்_____________ ஆகும்.
   அ) மயில் ஆ) மீன் இ) புலி
5. முல்லைக்குத் தேர் கொடுத்த வள்ளல் _____________ ஆவார்.
   அ) பாரி ஆ) பேகன் இ) அதியமான்

### ஆ. பொருத்துக.

1. சேரர்கள் – வைகை
2. சோழர்கள் – பாலாறு
3. பாண்டியர்கள் – பொய்கை
4. பல்லவர்கள் – காவிரி

74PF3V

### இ. குறுகிய விடையளி.

1. சேரர்களில் புகழ் பெற்ற அரசர்கள் யாவர்?
2. 'கடையேழு வள்ளல்கள்' என்போர் யாவர்?
3. கரிகாலனின் சாதனைகளைக் குறிப்பிடுக.
4. பல்லவர்களின் தலைநகரத்தையும் கடற்கரை நகரத்தையும் குறிப்பிடுக.

### ஈ. யாருடைய கூற்று?

1. "யானோ அரசன், யானே கள்வன்".



# அலகு 2 ஐவகை நில அமைப்பு

J1B9SR

## கற்றல் நோக்கங்கள்



- ❖ பண்டைய தமிழகத்தின் பல்வேறுபட்ட நில அமைப்புகளைப் பற்றித் தெரிந்து கொள்ளல்
- ❖ நில வகைப்பாடுகளின் கருப்பொருட்களை அறிதல்
- ❖ பல்வேறு நிலங்களில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறைகளைப் புரிந்து கொள்ளல்



## முன்னுரை

- ❖ உன் சொந்த ஊர் எது?
- ❖ உன் சொந்த ஊர் அமைந்துள்ள மாவட்டம் எது?
- ❖ உன் வீட்டைச் சுற்றி என்ன காண்கிறாய்?

நம் வீட்டைச்சுற்றி வயல்கள், வீடுகள், மரங்கள், கற்கள் மற்றும் வறண்ட நிலங்களைப் பார்க்கிறோம். நம் புவியில் இது போன்று மேலும் சிலவற்றைப் பார்க்கிறோம்.




1. புவியில் மலைக் குன்றுகளை எங்குக் காண்கிறாய்? மலைத் தொடர்களில்
2. விலங்குகளுடன் கூடிய அடர்ந்த மரங்களை எங்குக் காண்கிறாய்? காடுகளில்
3. நெற்பயிர் எங்கு வளரும்? வேளாண்மை நிலத்தில்
4. கடற்கரைப்பகுதிகளை எங்குக் காண்கிறாய்? கடல் மற்றும் கடற்கரைக்கு அருகில்
5. பயனற்ற நிலத்தின் பெயர் என்ன? தரிசு நிலம்

புவியின் மேற்பரப்பில் நாம் காணும் பல்வேறுபட்ட இடங்களையே நிலத்தோற்றம் என அழைக்கிறோம்.

பண்டைய தமிழ்நாட்டின் நிலங்கள் அவற்றின் தோற்றங்கள் மற்றும் மக்களின் செயல்பாடுகள் எதன் அடிப்படையில் பிரிக்கப்பட்டிருந்தன என்பதனை நாம் இப்போது பார்க்கலாம்.

## தமிழ்நாட்டின் நிலத்தோற்றமும் இயற்கை அமைப்பும்

சூரியக் குடும்பத்தில் சூரியனிலிருந்து மூன்றாவதாக இருக்கும் கோள் 'புவி' ஆகும். இது உயிர்வளி (ஆக்சிஜன்) யையும் வாழத்தகுந்த தட்பவெப்பத்தினையும் கொண்டுள்ளது. எனவே 'புவி'யை நாம் 'உயிர்க்கோளம்' என்றழைக்கிறோம்.

புவி அல்லது உயிர்க்கோளம் என்பது இயற்கையின் ஐந்து அடிப்படைக் கூறுகளான நிலம், நீர், காற்று, நெருப்பு மற்றும் ஆகாயம் (வானம்) ஆகியவற்றால் சூழப்பட்டுள்ளது.


புவி



# நிலம்




2FPNT9

## தமிழ்நாட்டின் நில அமைப்பு

- சங்க காலத்தில், தமிழ்நாட்டின் நிலப்பகுதி மக்கள் செய்த தொழிலின் அடிப்படையில் ஐவகை நில அமைப்புகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.
- ஐவகை நிலங்களுள் நான்கு வகைகள் மட்டும் நிலையாக இருந்தது. அவை குறிஞ்சி, முல்லை, மருதம் மற்றும் நெய்தல் ஆகும். குறிஞ்சியும் முல்லையும் வறண்ட பின் உருவாகும் நிலமே பாலை ஆகும்.

## அ . மலைகள் (குறிஞ்சி நிலம்)

மலை என்பது நம்மைச் சுற்றியுள்ள நிலப்பரப்புகளைவிட உயரமான சிகரங்களைக் கொண்ட ஒரு புவியியல் அமைப்பு ஆகும்.

மலையும் மலைசார்ந்த இடமும் 'குறிஞ்சி' என அழைக்கப்படுகிறது.



### 1. கருப்பொருள்

கருப்பொருள் என்பது கடவுள், மக்கள், தொழில், மரம், மலர், விலங்கு, பறவை மற்றும் இசைக் கருவி ஆகியவற்றைக் குறிப்பதாகும்.

| | |
|---|---|
| கடவுள் | முருகன் |
| மக்கள் | குறவர், குறத்தியர் |
| தொழில் | வேட்டையாடுதல், தேன் மற்றும் கிழங்கு சேகரித்தல் |
| மரம்/ மலர் | மூங்கில், வேங்கை/ குறிஞ்சி மலர் |
| விலங்கு/ பறவை | குரங்கு, மான் / மயில், கிளி |
| இசைக் கருவி | குறிஞ்சி யாழ் |


முருகன்


குறவர்


தேன் சேகரித்தல்


மூங்கில்


குரங்கு


மயில்

### 2. மக்களும் அவர்தம் தொழில்களும்

- பொருப்பன் – வீரர்கள்
- வெற்பன் – இனத் தலைவன், ஆயுதம் ஏந்தியவர்.
- சிலம்பன் – வீரதீரக்கலையில் வல்லவர்.
- குறவர் – வேட்டையாடுபவர், உணவு சேகரிப்பவர்.
- கானவர் – காடுகளில் வாழ்பவர்.

### 3. குறிஞ்சி நில மண்

- கருப்பு மற்றும் சிவப்பு நிறமுடைய பாறைகளையும் கூழாங்கற்களையும் உள்ளடக்கியது ஆகும்.




**தமிழ்நாட்டில் உள்ள சில முக்கிய மலைகள்**

கொல்லி மலை, சேர்வராயன் மலை, கல்ராயன் மலை, நீலகிரி மலை, ஜவ்வாது மலை, ஏலகிரி மலை.

**அதிசய மலர்– குறிஞ்சி**

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் மலர் குறிஞ்சி ஆகும். இது மேற்குத் தொடர்ச்சி மலையில் நன்கு வளர்கிறது. ஜூலை – செப்டம்பர் மாதங்களில் இது பூக்கும். இம்மலர் மருத்துவ குணம் கொண்டதாகும்.



## ஆ. காடுகள் (முல்லை நிலம்)

அடர்ந்த மரங்களைக் கொண்ட பெரும் நிலப்பகுதிகள் காடுகள் என்று அழைக்கப்படுகிறது.

காடுகள் நிறைந்த பகுதியை 'முல்லை நிலம்' என அழைப்பர். இப்பகுதி செம்மண்ணைக் கொண்டிருப்பதால் 'செம்புலம்' எனவும் அழைக்கப்படுகிறது.



### அ) கருப்பொருள்

| | |
|---|---|
| கடவுள் | திருமால் |
| மக்கள் | இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர் |
| தொழில் | கால்நடை மேய்த்தல். பழங்கள் சேகரித்தல், திணைப்பயிர் வளர்த்தல். |
| மரம்/மலர் | கொய்யா/ முல்லை மலர் |
| விலங்கு/ பறவை | கரடி, முயல்/ கிளி |
| இசைக் கருவி | முல்லை யாழ் |


திருமால்


கால்நடை மேய்த்தல்


தினைப்பயிர் வளர்த்தல்


முல்லை மலர்


முயல்


கிளி

## 2. மக்களும் அவர்தம் தொழில்களும்

- ❖ இடையர் – பால் விற்பவர்
- ❖ ஆயர் – கால்நடை மேய்ப்பவர்

## 3.. முல்லை நில மண்

- ❖ கற்கள் மற்றும் கூழாங்கற்களைக் கொண்ட செம்மண்.

## 4.. தமிழ்நாட்டின் காடுகள்

1. சதுப்புநிலக் காடுகள் – பிச்சாவரம், கடலூர் மாவட்டம்
2. மலைக்காடுகள் – நீலகிரி மாவட்டம்
3. காப்புக் காடுகள் – கன்னியாகுமரி மாவட்டம்
4. ஈரக்காடுகள் – கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள்



### தெரிந்து கொள்ளலாமா?

| உற்பத்திப் பொருட்கள் | பயன்படும் மரங்கள் |
|---|---|
| தாள் (காகிதம்) | மூங்கில், தைல மரம், குடைவேல் |
| தீக்குச்சிகள் | அயிலை, முள் இலவு |
| நறுமணப் பொருட்கள் | சந்தன மரம் |
| தைலம், சோப்பு | இலுப்பை, வேம்பு, புங்க மரம் |

புகழ் பெற்ற பிச்சாவரம் காடுகள்

தமிழ்நாட்டில் கடலூர் மாவட்டம், சிதம்பரத்திற்கு அருகில் பிச்சாவரம் என்ற ஊர் உள்ளது. இங்குள்ள சதுப்பு நிலக்காடுகள் இந்தியாவிலேயே இரண்டாவது மிகப் பெரியதாகும். இது சிறு தாவரங்களையும் நீர் விலங்குகளையும் ஈரமான வெப்பநிலையையும் கொண்டுள்ளது.



## இ. வயல்கள் (மருத நிலம்)

பரந்த, சமமான நிலப்பரப்பு சமவெளி எனப்படுகிறது. வயலும் வயல் சார்ந்த பகுதிகளும் 'மருதம்' என அழைக்கப்படுகிறது.



### 1. கருப்பொருள்கள்

| | |
|---|---|
| கடவுள் | இந்திரன் (வேந்தன்) |
| மக்கள் | உழவர், உழத்தியர் |
| தொழில் | உழவுத் தொழில் |
| மரம்/ மலர் | காஞ்சி, மருதம்/ தாமரை, குவளை |
| விலங்கு/ பறவை | எருமை/ நாரை |
| இசைக்கருவி | மருத யாழ் |


வேந்தன்


உழவர்கள்


தாமரை


குவளை


எருமை


நாரை

## 2. மக்களும் அவர்தம் தொழில்களும்

- ஊரன் – சிறுநிலக்கிழார்
- உழவர் – உழவுத் தொழில் செய்பவர்
- கடையர் – வணிகர்

## 3. மருத நில மண்

- வளமான **வண்டல் மண்** மற்றும் **செம்மண்ணைக்** கொண்டுள்ளது.

### வியக்கத்தக்க உண்மை

கல்லணை ஒரு பழமையான நீர்த்தேக்கம் ஆகும். இது தமிழ்நாட்டின் தஞ்சாவூர் மாவட்டத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இதன் நீளம் 1,080 அடி, அகலம் 66 அடி மற்றும் உயரம் 18 அடி ஆகும். பழங்காலத்திலேயே நீரைத் திருப்பி கால்வாய் பாசன வசதி செய்வதில், இந்த நீர்த்தேக்கம் உலகளவில் நான்காம் இடம் பெற்றுள்ளது .



## ஈ. கடல் / கடற்பகுதிகள் (நெய்தல் நிலம்)

புவியின் பெரும் நிலப்பரப்பில் பரவியிருக்கும் உப்பு நீர்த்தொகுதி 'கடல்' எனப்படும்.

கடலும் கடல் சார்ந்த பகுதியும் 'நெய்தல்' என அழைக்கப்படுகிறது.



### 1. கருப்பொருள்

| | |
|---|---|
| கடவுள் | வருணன் (மழைக்கடவுள்) |
| மக்கள் | பரதவர் (மீனவர்) |
| தொழில் | மீன் பிடித்தல் |
| மரம் / மலர் | புன்னை / காந்தள் |
| விலங்கு / பறவை | மீன் / கடற்காகம் |
| இசைக் கருவி | விளரி யாழ் |



வருணன்



மீன் பிடித்தல்



காந்தள்



புன்னை



மீன்



கடற்காகம்

## 2. மக்களும் அவர்தம் தொழில்களும்

- சேர்ப்பன் – கடல் உணவு வணிகர்
- புலம்பன் – தென்னைத் தொழில் செய்பவர்
- பரதவர் – கடற்போர் வீரர், வணிகர்
- நுளையர் – மீன் தொழில் செய்பவர்
- அளவர் – உப்பளத் தொழில் செய்பவர்

## 3. நெய்தல் நில மண்

- நெய்தல் நிலம் உவர் மண்ணால் ஆனது.

### அறிந்த இடம், அறியாத உண்மை

தமிழகத்தின் சென்னை நகரில் அமைந்துள்ள இயற்கையான கடற்கரை மெரினா கடற்கரை ஆகும். உலகின் மிக நீளமான இரண்டாவது கடற்கரை இதுவாகும். இது இந்தியாவின் கிழக்கு கடற்கரையில் வங்காள விரிகுடாவை ஒட்டி, வடக்கே புனித ஜார்ஜ் கோட்டை முதல் தெற்கே பட்டினப்பாக்கம் வரை அமைந்துள்ளது. இதன் நீளம் 13 கி.மீ ஆகும். (அமெரிக்க நாட்டின் புளோரிடாவில் உள்ள மியாமி கடற்கரை உலகிலேயே மிக நீளமான கடற்கரை ஆகும்.)



## உ. வறண்ட நிலங்கள் (பாலை நிலம்)

குறைவான மழை அல்லது மழை எதனையும் காணாத நிலப்பகுதி 'வறண்ட நிலம்' எனப்படுகிறது.

வறட்சியை நோக்கிச் செல்லும் மணற்பாங்கான நிலம் 'பாலை நிலம்' எனப்படும். குறிஞ்சியும் முல்லையும் வறண்டு விடும்போது பாலையாக மாறுகிறது.



www.tntextbooks.in

### 1. கருப்பொருள்

| | |
|---|---|
| கடவுள் | கொற்றவை (பெண் கடவுள்) |
| மக்கள் | எயினர், எயிற்றியர் |
| தொழில் | நிரை கவர்தல் |
| மரம் / மலர் | உழிஞை, பாலை / கள்ளி, இலுப்பை |
| விலங்கு / பறவை | புலி, யானை / கழுகு |
| இசைக் கருவி | பாலை யாழ் |


கொற்றவை


ஆநிரை கவர்தல்


கள்ளி


இலுப்பை


புலி


கழுகு

### 2. மக்களும் அவர்தம் தொழில்களும்

- மறவர் – மாபெரும் போர்வீரர், வேட்டையாடுபவர்.
- எயினர் – வீரர்.

### 3. பாலை நில மண்

- மணலும் உவர் மண்ணும் உள்ள பகுதி பாலை ஆகும்.




1. ஆசிரியரின் உதவியுடன், அருகில் உள்ள மலைப்பகுதிக்குச் சென்று அங்குள்ள மூலிகைகளையும் அவற்றின் பயன்பாடுகளையும் அறிந்து கொள்.
2. "மரங்கள் நம் நண்பர்கள்". ஏற்றுக் கொள்கிறாயா? உன் குழுவினருடன் விவாதி.

www.tntextbooks.in

ECBII5

# மதிப்பீடு

## அ. பட்டியலிடு

1. உங்கள் மாவட்டத்தில் உள்ள மலைகளையும் அவை அமைந்துள்ள ஊர்களையும் எழுதுக.

| வ.எண் | மலைகள் | ஊர்கள் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |

2. உங்கள் பள்ளியைச் சுற்றியுள்ள மரங்களின் பெயர்களை எழுதுக.

| வ.எண் | மரங்களின் பெயர்கள் |
|---|---|
| 1. | |
| 2. | |

## ஆ. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. பரந்த சமமான நிலப்பரப்பு ________ எனப்படுகிறது.
2. உலகின் மிகப்பழைமையான நான்காவது பெரிய நீர்ப்பாசனவசதி கொண்ட நீர்த்தேக்கம் ______________.
3. கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள காடுகள் _____________.
4. வயலும் வயல் சார்ந்த இடமும் _____________ ஆகும்.
5. ______________ இந்தியாவின் மிகப்பெரிய சதுப்புநிலக் காடு ஆகும்.
6. மெரினா கடற்கரை ______________ பகுதியில் அமைந்துள்ளது.

## இ. பொருத்துக.

i)

1. முருகன் – முல்லை
2. திருமால் – பாலை
3. இந்திரன் – குறிஞ்சி
4. வருணன் – மருதம்
5. கொற்றவை – நெய்தல்

ii)

1. கடவுள் – கிழங்கு அகழ்தல்
2. மலர் – குறவர், குறத்தியர்
3. மக்கள் – குறிஞ்சி மலர்
4. தொழில் – முருகன்

## ஈ குறுகிய விடையளிக்க.

1. ஐவகை நிலங்களில் வாழ்ந்த மக்களின் பெயர்களை எழுதுக.
2. முல்லை நிலத்தின் நான்கு கருப்பொருட்களைப் பட்டியலிடுக.
3. செம்புலம் பற்றி நீ அறிவது யாது?
4. பாலை நிலம் எவ்வாறு உருவானது?
5. பாலை நிலத்தின் கருப்பொருள் யாது?

www.tntextbooks.in



# அலகு 3 நகராட்சி மற்றும் மாநகராட்சி



R8XD81

## கற்றல் நோக்கங்கள்

- ❖ நகராட்சி மற்றும் நகராட்சியின் பணிகளைப் பற்றி அறிந்து கொள்ளல்
- ❖ உள்ளாட்சி அமைப்புகளைப் பற்றி புரிந்து கொள்ளல்
- ❖ மாநகராட்சி மற்றும் பேரூராட்சிகளின் பணிகள் பற்றி அறிந்து கொள்ளல்
- ❖ நகராட்சி மற்றும் மாநகராட்சிகளின் வருவாய் ஆதாரங்கள் பற்றி அறிதல்



கோடை விடுமுறையின்போது முகிலன் தன் மாமா வீட்டிற்குச் சென்றான். ஒரு நாள் அவன் பூங்காவில் விளையாடிக் கொண்டிருந்தான். அப்பொழுது நகராட்சிப் பணியாளர்கள், வீட்டிற்கான சொத்துவரி மற்றும் இதர வரிகள் பற்றி அறிவித்ததைக் கேட்டான். உடனே முகிலன் மாமாவிடம் ஓடி வந்தான்.



**மாமா**

ஏன் ஓடிவருகிறாய்? என்ன நடந்தது?



**முகிலன்**

மாமா! நகராட்சி என்றால் என்ன? நாம் ஏன் வரி கட்டவேண்டும்?



**மாமா**

முகிலா! நகராட்சி என்பது உள்ளாட்சியின் ஓர் அமைப்பு. இங்கு 50,000 முதல் 1,00,000 வரை மக்கள் வாழ்கின்றனர். இது பல வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. நமது வீடு 10-ஆவது வார்டில் அமைந்துள்ளது. நமது நகராட்சியில் ஏறத்தாழ 30 வார்டுகள் உள்ளன. தமிழ்நாட்டில் 152 நகராட்சிகள் உள்ளன.



நகராட்சிப் பணியாளர்கள்



நகராட்சி அலுவலகம்



**முகிலன்**

நகராட்சியின் தலைவர் யார்?



**மாமா**

முகிலா! நகராட்சியின் தலைவர் 'நகராட்சியின் தந்தை' என அழைக்கப்படுகிறார்.

நகராட்சியின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கின்றனர். நகராட்சி உறுப்பினர்களின் பணிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். நகராட்சியின் உறுப்பினர்களில் ஒருவர் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.



**முகிலன்**

மாமா! நகராட்சியின் பணிகள் யாவை?





**மாமா**

► தெருவிளக்கு அமைத்தல்.

► நூலகம் அமைத்துப் பராமரித்தல்.

► அங்காடியைப் (சந்தையை) பராமரித்தல்.

► குடிநீர் வசதிகளை வழங்குதல்.

► சாலைகள் அமைத்தல்.

► குப்பைகளை அகற்றுதல்.





**முகிலன்**

இப்பணிகளை மேற்கொள்ள நகராட்சிக்கு வருவாய் எப்படி கிடைக்கிறது?



**மாமா**

இத்தகைய பணிகளை நகராட்சி மேற்கொள்வதற்கு மத்திய, மாநில அரசுகள் நிதி வழங்குகின்றன. மேலும் மக்கள் செலுத்தும் வீட்டுவரி, தொழில் வரி, குடிநீர் வரி, கடை வரி, சாலைவரி மற்றும் கழிவுநீர் அகற்றல் வரி போன்ற வரிகளின் மூலமும் வருவாய் கிடைக்கிறது.



## தெரிந்து கொள்ளலாமா?



உள்ளாட்சி அமைப்பின் தந்தை – ரிப்பன் பிரபு



**மாமா**

நகராட்சி தவிர கீழ்க்காண்பனவும் உள்ளாட்சி அமைப்பின் கீழ் வருகின்றன.

- டவுன்ஷிப் (நகரியம்)– (எ.கா) நெய்வேலி
- கண்டோன்மெண்ட் (இராணுவக் கட்டுப்பாட்டு வாரியங்கள்) – (எ.கா) குன்னூர், பரங்கிமலை
- அறிவிக்கப்பட்ட பகுதிகள்.







தமிழ்நாட்டில் 33 மாவட்டங்கள், 386 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 12,620 கிராம ஊராட்சிகள் உள்ளன.



**தெரிந்து கொள்ளலாமா?**

- 1957 ஆம் ஆண்டு 'பல்வந்த்ரா ராய் மேத்தா குழு' அறிக்கையின்படி இந்தியாவில் மூன்றடுக்கு பஞ்சாயத்து முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1978 ஆம் ஆண்டு 'அசோக் மேத்தா குழு' அறிக்கையின்படி இந்தியாவில் இரண்டடுக்கு பஞ்சாயத்து முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

**மாமா**

உதாரணமாக, நாம் சென்னை, திருச்சி, கோவை, மதுரை மற்றும் சேலம் போன்றவற்றை மாநகராட்சிகள் என அழைக்கிறோம்.





**முகிலன்**

மாநகராட்சி என்றால் என்ன?

**மாமா**

தமிழ்நாடு அரசு, மக்கள் தொகை மற்றும் வருவாய் அடிப்படையில் சில நகராட்சிகளை தரம் உயர்த்தும். அவை மாநகராட்சி என்று அழைக்கப்படும்.





**முகிலன்**

மாமா ! தமிழ்நாட்டில் எத்தனை மாநகராட்சிகள் உள்ளன?

**மாமா**

தமிழ்நாட்டில் 14 மாநகராட்சிகள் உள்ளன. இதில் சென்னை மாநகராட்சி மிகவும் பழைமையானது.





மாநகராட்சியின் பணிகள்



மாநகராட்சி அலுவலகம்



**முகிலன்**

மாமா! மாநகராட்சியின் தலைவரும், உறுப்பினர்களும் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்?

**மாமா**



மாநகராட்சியின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கின்றனர். மாநகராட்சியின் தலைவர் 'மேயர்' எனப்படுகிறார். அவரை மாநகராட்சியின் தந்தை எனவும் அழைப்பர். மாநகராட்சி உறுப்பினர்களின் பணிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். இந்திய நிர்வாக அதிகாரிகள் மற்றும் இதற்கு இணையானவர்கள் அரசால் மாநகராட்சியில் பணியமர்த்தப்படுகிறார்கள். பல நகர்ப்புறங்கள் மாநகராட்சிகளைக் கொண்டுள்ளன.




## மாநகராட்சி

1. சென்னை
2. மதுரை
3. கோயம்புத்தூர்
4. திருச்சிராப்பள்ளி
5. சேலம்
6. திருநெல்வேலி
7. வேலூர்
8. தூத்துக்குடி
9. திருப்பூர்
10. ஈரோடு
11. தஞ்சாவூர்
12. திண்டுக்கல்
13. ஓசூர்
14. நாகர்கோவில்

**நாகர்கோவில் சமீபத்தில் தமிழக அரசால் 14ஆவது மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டது .**

www.tntextbooks.in



**முகிலன்**

மாநகராட்சியின் பணிகள் என்ன?





**மாமா**

- நகரச் சாலைகளை அமைத்தல் மற்றும் பராமரித்தல்.
- குடிநீர் வசதிகளை அமைத்தல்.
- குப்பைகளை அகற்றுதல்.
- நூலகங்களை அமைத்துப் பராமரித்தல்.
- பூங்காக்களை அமைத்துப் பராமரித்தல்.
- பிறப்பு மற்றும் இறப்பு பதிவேடுகளைப் பராமரித்தல்.



**முகிலன்**

மாநகராட்சிக்கு வருவாய் எவ்வாறு கிடைக்கிறது?



**மாமா**

தொழில் வரி, சொத்துவரி, பொழுதுபோக்கு வரி, சுங்கவரி மற்றும் சாலை வரிகள் மூலம் கிடைக்கிறது.



**முகிலன்**

நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் தவிர வேறு என்ன அமைப்புகள் உள்ளன?



மாமா

மாநகராட்சி, நகராட்சிக்கு அடுத்து பேரூராட்சி என்ற ஒரு அமைப்பு உள்ளது. இதன் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்களை மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கின்றனர். இவர்களின் பதவிக்காலம் ஐந்தாண்டுகள் ஆகும். நிர்வாக அதிகாரிகளால் பேரூராட்சி நிர்வகிக்கப்படுகிறது. பேரூராட்சி என்பது 5,000க்கும் மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்டதாகும்.



முகிலன்

மாமா! உங்களால் நகராட்சி மற்றும் மாநகராட்சி நிர்வாகங்களைப் பற்றி தெரிந்துக் கொண்டேன்.

நன்றி மாமா !



மாமா

நன்று!

வா, கை கழுவிக் கொண்டு நாம் மதிய உணவு சாப்பிடலாம்.




1. உனது வார்டில் உள்ள பூங்கா மற்றும் நூலகங்களில் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளைப் பற்றி உனது வகுப்பில் கலந்துரையாடு.
2. உனக்கு அருகில் உள்ள மாநகராட்சிக்கு, உனது ஆசிரியருடன் சென்று அங்கு நடக்கும் சபைக் கூட்டத்தைக் கவனி.
3. உனது பெற்றோர் என்னென்ன வரிகளை செலுத்துகின்றனர்?

G262LS

# மதிப்பீடு

## அ .கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. தமிழ்நாட்டின் மிகப்பழைமையான மாநகராட்சி_______________ ஆகும்.
2. உள்ளாட்சியின் தந்தை என்று அழைக்கப்படுபவர்_______________.
3. _______________ ஆம் ஆண்டு பல்வந்த்ரா ராய் மேத்தா குழு அறிக்கையின்படி இந்தியாவில் மூன்றடுக்கு பஞ்சாயத்து முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
4. நகராட்சியின் பணிக்காலம்_______________ ஆண்டுகள் ஆகும்.

## ஆ. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | கிராமப்புற உள்ளாட்சி | குடவோலை |
| 2. | ரிப்பன் கட்டிடம் | நகரியம் |
| 3. | நெய்வேலி | கிராம ஊராட்சி |
| 4. | சோழர்கள் | மாநகராட்சி |
| 5. | மேயர் | ரிப்பன் பிரபு |

## இ. காலி இடங்களை நிரப்புக.

| வ.எண். | | நகராட்சி | மாநகராட்சி |
|---|---|---|---|
| 1 | தலைவர் | நகராட்சியின் தந்தை | |
| 2 | எண்ணிக்கை | | 14 |
| 3 | பணிக்காலம் | | |
| 4 | அதிகாரிகள் | ஆணையர் | |
| 5 | வருவாய் | | தொழில் வரி |

## ஈ. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. மாநகராட்சியின் பணிகள் யாவை?
2. நகராட்சியின் தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?
3. தமிழ்நாட்டில் மாநகராட்சிகளின் எண்ணிக்கை யாது?
4. நகராட்சியின் வருவாய் ஆதாரங்கள் யாவை?

# வகுப்பு IV – கணக்கு, அறிவியல், சமூக அறிவியல் (பருவம் I, தொகுதி 2)
# மேலாய்வாளர்கள், நூலாசிரியர்கள் பெயர் பட்டியல்

### கல்வி ஆலோசகர்

**முனைவர் பொன். குமார்**
இணை இயக்குநர் (பாடதிட்டம்),
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

### பாடநூல் ஒருங்கிணைப்பாளர்கள்

**முனைவர் கே. எஸ். மொழியரசி**
முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி
மற்றும் பயிற்சி நிறுவனம்.
கீழப்பலூர், அரியலூர் மாவட்டம்.

### பாட ஒருங்கிணைப்பாளர்

#### கணிதம்

**கே. ரேவதி**
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர்
கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்.
பெரம்பலூர்.

**பி. மலர்விழி**
பட்டதாரி ஆசிரியை,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
பாடியநல்லூர், திருவள்ளூர்.

#### அறிவியல்

**தெ. அசோக்**
முதுநிலை ஆசிரியர்,
அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,
பொன்னேரி, திருவள்ளூர்.

#### சமூக அறிவியல்

**ச. விஜயலட்சுமி**
பட்டதாரி ஆசிரியை,
அ. மே. நி. பள்ளி,
கூவத்தூர், காஞ்சிபுரம்.

### கலை மற்றும் புத்தக வடிவமைப்புக் குழு

ராஜேஷ் தங்கப்பன்
ஜாண்ஸ்மித், சந்தியாவு ஸ்டீபன்,
யோகேஷ், பிரசாந்த், பக்கிரிசாமி
மனோகர் ராதாகிருஷ்ணன்

### தரக்கட்டுப்பாடு

காமாட்சி பாலன் ஆறுமுகம்
அருண் காமராஜ் பழனிசாமி
ஜெரால்டு வில்சன்

### அட்டைப்பட வடிவமைப்பு

கதிர் ஆறுமுகம்

### ஒருங்கிணைப்பாளர்

ரமேஷ் முனிசாமி

## கணிதம்

### மேலாய்வாளர்கள்

**முனைவர் இராமானுஜம்**
பேராசிரியர், கணித அறிவியல்
நிறுவனம், தரமணி, சென்னை.

**ஆர். கிருத்திகா**
ஆராய்ச்சி நிறுவனம்
அசிம் பிரேம்ஜி பல்கலைக்கழகம்,
பெங்களூரு.

### பாட நூலாசிரியர்கள்

**பி. கல்பனா**
பட்டதாரி ஆசிரியை,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
ஆலம்பாக்கம், புல்லம்பாடி
ஒன்றியம், திருச்சி.

**எஸ். ரவி**
பட்டதாரி ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
அழகிய மணவாள
மண்ணச்சநல்லூர், திருச்சி.

**எம். சங்கர் கணேஷ்**
இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
ஆளூர், விழுப்புரம்.

**ஐ. மஹாலக்ஷ்மி**
தலைமை ஆசிரியை,
ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி,
செம்பியாக்குடி, அரியலூர்

## அறிவியல்

### மேலாய்வாளர்கள்

**ஏஞ்சலின் ரூபி**
உதவி பேராசிரியை,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை.

**முனைவர் க. சிந்தனையாளன்**
பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்
நிலைப் பள்ளி, பெரியார் நகர்,
நந்தம்பாக்கம், காஞ்சிபுரம்.

### பாட நூலாசிரியர்கள்

**ஜே. பார்த்திபன்**
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர்
கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
கீழப்பழுவூர், அரியலூர்.

**ஸ்ரீவத்சன் ராமசாமி**
மதி பௌண்டேஷன்,
சென்னை.

**ந. கோபி**
வட்டார வள ஆசிரியர் பயிற்றுநர்,
நெமிலி ஒன்றியம், வேலூர்.

**பி. வசந்தகுமார்**
பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
ஒத்தைபுளிகுடியிருப்பு,
புதுக்கோட்டை.

**என். அகிலா**
பட்டதாரி ஆசிரியர்,
அ.உ.நி.பள்ளி, அடிகுடிக்காடு,
அரியலூர்.

**எஸ். இந்திரா**
பட்டதாரி ஆசிரியர்,
அ.உ.நி.பள்ளி, முனியன் குறிச்சி,
அரியலூர்.

**கே. ஆனந்தன்**
பட்டதாரி ஆசிரியர்,
அ.உ.நி.பள்ளி, சோழமாதேவி,
அரியலூர்.

**வி. காமாட்சி**
தலைமை ஆசிரியை,
ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளி,
கண்டமங்கலம், விழுப்புரம்

**கே. செல்வமணிகண்டன்**
இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளி,
கருக்கை, கடலூர்.

**எம். மரியநேசன்**
இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளி,
தென்னவராயன்பட்டு,

## சமூக அறிவியல்

### மேலாய்வாளர்கள்

**க வேலு,** பட்டதாரி ஆசிரியர்,
அ. ம. மே. நி. பள்ளி, தலைவாசல்,
சேலம் மாவட்டம்.

**சு. கோமதி மாணிக்கம்,**
பட்டதாரி ஆசிரியை,
அ. மே. நி. பள்ளி,
பழைய பெருங்களத்தூர்,
காஞ்சிபுரம்.

**ஸ்ரீவத்சன் ராமசாமி**
மதி பௌண்டேஷன்
சென்னை.

### பாட நூலாசிரியர்கள்

**ஏ. சின்னப்பன்**
பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர் நிலைப் பள்ளி,
பீல்வாடி, பெரம்பலூர்.

**எம். வரதன்**
பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர் நிலைப் பள்ளி,
நன்னை, பெரம்பலூர்.

**கே. செல்வகுமார்**
வட்டார வள ஆசிரியர் பயிற்றுநர்,
செந்துறை, அரியலூர்.

**எஸ். அபிராமி**
இடைநிலை ஆசிரியை,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
டி–பாலூர், அரியலூர்.

### விரைவுக்குறியீடு மேலாண்மைக்குழு

**இரா. ஜெகநாதன்,**
இடைநிலைஆசிரியர்,
ஊ.ஒ.ந.பள்ளி, போளூர்,
திருவண்ணாமலை.

**வ. பத்மாவதி,** பட்டதாரிஆசிரியர்,
அ.உ.பள்ளி, திருமானூர்,
அரியலூர்.

**சூ. ஆல்பர்ட் வளவன் பாபு,**
பட்டதாரிஆசிரியர்
அ.உ.பள்ளி, பரமக்குடி,
இராமநாதபுரம்.

இந்நூல் 80 ஜி.எஸ்.எம் எலிகண்ட் மேப் லித் தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.
வெப் ஆப்செ ட் முறையில் அச்சிட் டோர்: